முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.பொள்ளாச்சி

நாள்: 05.02.2026. அ.வ.எண். 33/2013, பி.வா.சா.1.மோகன்ராஜ் த/பெ.ராஜமாணிக்கம்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1)தாவா சொத்து வெங்கடாசல கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவர் இறந்ததிற்கு பின்னிட்டு வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் இரு வழக்குகள் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்ன வழக்கு என்ற விவரம் எனக்கு தெரியாது. ஒரு வழக்கு வெங்கடாசல கவுண்டர் மற்றும் ராஜம்மாள் ஆகியோருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்தால் என்றால் சரிதான். அதில் எனது தகப்பனார் வாடகைகதாரர் என்றும் சட்டவிரோதமாக காலிசெய்யக்கூடாது என்று வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான்.

2) வெங்கடாசலகவுண்டர் இறந்ததிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகள் மீது வாடகைகதாரர் என்றும் சட்டவிரோதமாக காலிசெய்யக்கூடாது என்று வழக்கு போட்டிருந்தார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு நிலுவையில் இருந்தபோது எனது தகப்பனார் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் வாரிசு அடிப்படையில் நாங்கள் கட்சி சேர்க்கப்பட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி இரண்டு வழக்குகளையும் நான் மேற்கொண்டு நடத்ததால் தள்ளுபடி ஆகிவிட்டதால் என்றால் சரிதான். வாய்மொழி குத்தகையை நிரூபிக்க முடியாததால் மேற்படி இரண்டு வழக்குகளையும் நடத்தாமல் விட்டுவிட்டேன் என்றால் சரியல்ல.

3) எந்த ஆண்டு எனது தகப்பனார் தாவா சொத்தை குத்தகைக்கு எடுத்தார் ஞாபகம் இல்லை. எவ்வளவு வாடகை என்றால் ரூபாய் 500 ஆகும். வாடகை செலுத்தி வந்ததற்கு ராஜம்மாளிடமோ, வெங்கடாசலகவுண்டரிடமோ அல்லது அவரது வாரிசுகளிடமோ இரசீதுகள் ஏதேனும் பெற்றோமா என்றால் இல்லை. தாவா சொத்து 40 செண்ட் அதில் ஒரு வீடு உள்ளது என்றால் சரிதான், அதற்கு மின் இணைப்பு குடிநீர் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த வீட்டில் யார்யார் குடியிருந்து வருகிறோம்.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

என்றால் நானும் எனது தம்பியும் குடும்பத்தோடு வசித்து வருகிறோம். தற்போது அந்த வீடு எவ்வளவு ரூபாய்கு வாடகைக்கு போகும் என்றால் 750 ரூபாய்க்கு வாடைக்கு போகும்.

4)எத்தணை ஆண்டுகளாக மேற்படி சொத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சுமார் 25 ஆண்டுகளாக வசித்து வருகிறோம். வாடகைகயை நீதிமன்றத்தில் செலுத்துவதற்கோ அல்லது வாதிக்கு மணி ஆர்டரில் அனுப்புவதற்கோ நடவடிக்கை ஏதேனும் மேற்கொண்டானா என்றால் இல்லை. நான் சட்டவிரோதமா தாவா சொத்தில் குடியிருந்து வருவதால் தான் மேறப்டி நடவடிக்களை நான் மேற்கொள்ள வில்லை என்றால் சரியல்ல.

5) வெங்கடாசலகவுண்டரோ அல்லது ராஜம்மாளோ எங்களை வாடகதைாரராக ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சட்டவிரோதமாக தாவா சொத்தில் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். வாதிகள் 17.12.2011 தேதியில் சட்டவிரோதமாக குடியிருந்த வருவதாக அறிவிப்பு ஒன்றை அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பிற்கு நாங்கள் பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளோம் என்றால் சரிதான். என்னுடைய பிரமாணப்பத்திரிக்கையில் வழக்கறிஞர் அறிவிப்பே வாதி அனுப்பவில்லை என்று கூறியிருப்பது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றால் சரியல்ல.

6)அதேபோல் 1ம் வாதி பார்வதி 2ம் வாதி சாந்தகுமாரிக்கு எழுதிவைத்த உயிலைப்பற்றி கேள்விகேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. சட்டவிரோமதாக தாவா சொத்தில் குடியிருந்து கொண்டு சட்டபடியான ஆவணங்கள் குறித்து கேள்வி கேட்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ராஜம்மாளிடம் ரூபாய் 10000 கொடுத்தாக சொல்வதற்கு ஆவணங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. எந்த தேதியில் மேற்படி தொகை கொடுக்கப்பட்டது என்று எனது தகப்பனார் தாக்கல் செய்த தாவாவில் சொல்லவில்லை என்றால் எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியாது. என்னிடம் காட்டப்படும் அ.வ.எண். 375/2003 வழக்கிற்கான பிராது நகல்

ஒப்பம்/–(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி

**வா.சா.ஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது.(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

7)ராஜம்மாளிடம் முன்தொகையாக ரூபாய் 10000 கொடுத்தது என்பதும் பொய் வெங்கடாசலகவுண்டர் மற்றும் அவரது வாரிசுகளிடம் வாடகை செலுத்தி வந்ததகா கூறுவதும் பொய் என்றும் தாவா சொத்தில் சட்டவிரோதமாக குடியிருந்து வருகிறோம் என்றால் சரியல்ல. நான் வாடகை கொடுக்கவில்லை என்றால் என்னை தாவா சொத்தில் குடியிருக்கவே விட்டிருக்கமாட்டார்கள். தாவா சொத்தில் சட்டவிரோதமாக குடியிருந்து வருவதால் அதற்கான நஷ்டஈடும், தாவா சொத்தின் காலிசுவாதீனத்தை வாதியின் வசம் ஒப்படைக்க கடமை பட்டவர் என்றால் வாடகைதாராக தான் குடியிருந்து வருகிறேன்.

8)தாவா சொத்தில் வாடகைக்கு குடியிருந்து வருவதாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி கட்டிடத்திற்கு பராமரிப்பு செலவினங்கள் ஏதேனும் செய்தேனா என்றால் செய்தேன். கட்டிடத்தை இடித்து மறுசீரமைப்பு செய்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.9 ல் கட்டித்தை இடித்து ரூபாய் 2 இலட்சத்திற்கு மறுசீரமைப்பு செய்ததாக கூறியிருப்பது பொய் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதியை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் சட்டவிரோதமாக குடியிருக்கவேண்டும் என்பதற்காக பல தவறான சங்கதிகளை கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-(R. சுஜாதா)

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி